களுக்கு விஸ்தரிக்க, அந்த நிறுவனத்துடன் பேசிக் கொண்டு இருக்கிறோம். ஆகவே இந்தப் பகுதிகளில்தான் விஸ்தரிக்கப்பட முடியுமே தவிர, விருத்தாசலத்திற்குக் கொண்டுவருவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சுரங்கத்தில் தண்ணீர் எடுத்து இறைக்கும் பகுதிகளில், ஏற்கெனவே பாசன வசதிக்கு அரசாங்கம் உறுதி செய்த பகுதிகள்தான். அங்கேதான் மீண்டும் இறைப்புத் தண்ணீர் போகிறது. ஆனால் தண்ணீர் மேற்குப் பகுதிகளுக்குத் தான் தேவை. அங்கே நிலத்தடி நீர் இல்லை. மிகவும் வறட்சியான பகுதிகளைப் பாதுகாக்க, இப்போது முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி அந்த நிறுவனத்திடம் இருந்து ராயல்டியாக ரூபாய் 30 கோடி பெற்றிருக்கிறார்களே, அதிலிருந்து 1 கோடி ரூபாயையாவது செலவு செய்து அங்கே தண்ணீர் கொண்டுவர வேண்டும். இறைக்கிற தண்ணீரைக் கொஞ்சம் தூக்கி இறைத்தால் வீராணம் குழாய்களையும் பயன்படுத்தினால் அந்தத் தண்ணீர் மேற்குப் பகுதிக்கு வந்துவிடும். அதுகுறித்து நெய்வேலி நிறுவனத்துடன் பேசி, அவர்கள் அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டால், பல கிராமங்கள் பயன் அடையும் சந்தர்ப்பம் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அங்கே நேரில் சென்று பார்த்துவிட்டு, அதற்கு அனுமதி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தில் எனக்கு முரண்பாடான எண்ணம் இல்லை. இயலாமையைத்தான் நான் சொன்னேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மனம் மகிழ்ச்சியடையத்தக்க வகையில் ஒரு நல்ல செய்தி. அடுத்த மாதம் முதல் வாரத்தில் அவர்களோடு பேச வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நமது அமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்களும் சமீபத்தில் அதுகுறித்து அந்த நிறுவனத்துடன் பேசிவிட்டு வந்திருக்கிறார். வாய்ப்புக் கிடைத்தால், விரைவில் இது குறித்து அந்த நிறுவனத்துடன் நான் நேரில் பேசி, நடவடிக்கை எடுகக லாம். உறுப்பினர் அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றலாம்.

ஆறுமுகமங்கலம் குளத்திற்கு வரும் தண்ணீரை எடுத்தல்.

*8397—திரு. சோ. அழகர்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஆறுமுகமங்கலம் குளத்திற்கு வரக்கூடிய தண்ணீரை இடைமறித்து ஆயில் இன்ஜின்கள் மூலம் புஞ்சை நிலங்களுக்கு சட்டத்துக்கு புறம்பாக தண்ணீர் எடுப்பதை நிறுத்தக் கோரி அப்பகுதி விவசாயிகளிடமிருந்து அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

1991 சனவரி 21]

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சட்டத்திற்கு புறம்பாக தண்ணீர் எடுப்பதை நிறுத்துவதற்காக அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து வடிகால் மூலமாக ஆறுமுகமங்கலம் குளத்திற்கு நீர் நிரப்பப்படுகிறது. தூத்துக்குடி தொழிற்சாலைக்கும், மின் உற்பத்திக்கும் வினாடிக்கு 40 கன அடி தண்ணீர் எடுப்பதாக ஒப்பந்தம். ஆனால் ஆறுமுகமங்கலம் குளத்திற்கு ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து 140 கன அடி தண்ணீரை எடுத்துச் செல்கிறார்கள். அதனாலே தண்ணீர் போகிற போது பக்கத்தில் இருக்கிற விவசாயிகள் கவரப்பட்டு தண்ணீரை எடுக்கிறார்கள். அதற்குப் பதிலாக குழாய் மூலமாக நீங்கள் 40 கன அடி தண்ணீர் மட்டும் எடுத்துச் சென்றுவிட்டால் ஸ்ரீவைகுண்டம் அணையில் தண்ணீர் தேங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது விவசாயத்திற்குப் பயன்படும். எனவே, குழாய் ஒன்று அமைத்து அந்த 40 கன அடி தண்ணீரை எடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

10–05 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல ஸ்பிக் தொழிற்சாலைக்கும், தூத்துக்குடி தெர்மல் பிளாண்டிற்கும் தேவையான தண்ணீரைக் குழாய் மூலமாக கொண்டு செல்வதன் மூலம் இப்படிப்பட்ட பிரச்சினை எழுவதற்கு வாய்ப்பில்லையென்று நானே இலாக்காவினரிடம் தெரிவித்து அந்தச் செலவுகளை ஸ்பிக் நிறுவனமும், தெர்மல் பிளாண்ட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறேன். காரணம், சில நேரங்களில் தண்ணீர் போகிறபோது இவர்களே எடுத்துவிடுகிற காரணத்தால் தொழிற்சாலை பாதிக்கப்பட்டு விடுகிறது. எனவே, அந்த எண்ணம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை.

*3780—திரு. க. அர்ச்சுனன்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரியில் பழவகைகளைக் கொண்டு ஜாம் (Jam) தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா ?